போர்ட் ஸெய்ன்ட் ஜார்ஜ் கெஜெட்

IV-வது பாகத்தின் ஸப்ளிமெண்ட்

SUPPLEMENT TO PART IV OF THE FORT ST. GEORGE GAZETTE,

JULY 3, 1923.

ந. 10 (1).] மதராஸ்: செவ்வாய்க்கிழமை மாலை, 1923-ம் ௵ ஜூலை மீ 3௳. [விலை, 3 பை.

சென்னை கவர்ன்மெண்ட் மசோதா ஆக்ட்

BILL OF THE GOVERNMENT OF MADRAS.

சட்டதிட்டங்கள் செய்வதற்கான சென்னபட்டணம் கவர்னரவர்களின்
ஆலோசனை சபையில் கொண்டுவரப்போகும் மசோதா ஆக்ட்.

சென்னைச் சட்ட நிரூபணசபையில் வேலை நடந்தேறுவதைக்குறித்த விதிகளைச் சேர்ந்த 18-வது விதியின்படி, அடியிற்கண்ட மசோதா ஆக்டும் அதன் ஹேதுக்களும் நோக்கங்களும் அடங்கிய சூசிகையும் யாவர்க்கும் தெரியும்படி பிரசித்தம் செய்யப்படுகின்றன :—

BILL No. 4 of 1923.

1923-ம் ௵த்து 4-வது நெ. மசோதா ஆக்ட்.

A BILL FURTHER TO AMEND THE COURT FEES ACT, 1870, IN ITS APPLICATION TO THE PRESIDENCY OF MADRAS.

சென்னபட்டணம் ராஜதானிக்குப் பிரயோகப்படுகிறமட்டில் 1870-ம் ௵த்திய கோர்ட் கட்டண ஆக்டைப் பின்னும் திருத்துவதற்கான மசோதா ஆக்ட்.

…ம் ௵ …-வது …க்ட்.

சென்னபட்டணம் ராஜதானிக்குப் பிரயோகப்படுகிறமட்டில் 1870-ம் ௵த்திய கோர்ட் கட்டண ஆக்டைப் பின்னும் திருத்துவது யுக்தமாயிருக்கிறபடியால், இதனால் விதிக்கப்படுகிறதென்னவென்றால் :—

சுருக்கமான பெயர்.

1. இந்த ஆக்டை, கோர்ட் கட்டணத்தைக் குறித்த (பின்னும் திருத்துவதற்கான), 1923-ம் ௵த்திய சென்னபட்டணத்து ஆக்டென்று சொல்லலாம்.

சென்ன பட்டணம் 1922-ம் ௵ …த 5-வது …க்ட். …70-ம் ௵ …த 7-வது …க்ட்.

சென்னபட்டணம் ராஜதானிக்குப் பிரயோகப்படுகிற மட்டில் 1870-ம் ௵த்திய கோர்ட் கட்டண ஆக்ட் 2-வது ஷெட்யூலைச்சேர்ந்த 10-வது ஆர்ட்டிகிலில் திருத்தம்.

2. கோர்ட் கட்டணத்தைக்குறித்த (திருத்துவதற்கான,) 1922-ம் ௵த்திய சென்னபட்டணத்து ஆக்டினால் திருத்தப்பட்டபடிக்குள்ள 1870-ம் ௵த்திய கோர்ட் கட்டண ஆக்ட் 2-வது ஷெட்யூலைச் சேர்ந்த 10-வது ஆர்ட்டிகிலில் 'அட்வோகேட்டால்' என்னும் வார்த்தைக்கு பர்த்தியாக 'நியாயவாதியால்' என்னும் வார்த்தையை அமைத்துக்கொள்ளவேண்டும்.

இந்த மசோதா ஆக்ட் பிறப்பதற்குண்டான ஹேதுக்களும் நோக்கங்களும்.

யாதொரு கட்சிக்காரருக்காகத் தாம் நிறுத்திக்கொள்ளப்பட்டிருப்பதாய்ப் பொருள்படுவதாகவாவது தெரிவிப்பதாகவாவதிருந்து யாதொரு அட்வோகேட் தாக்கல் செய்யும் (கோர்ட்டில்) ஹாஜராவது சம்பந்தமான யாதாஸ்துக்கு, கோர்ட் கட்டணத்தைக் குறித்த (திருத்துவதற்கான) 1922-ம்௵த்திய சென்னபட்டணத்து ஆக்டினால் திருத்தப்பட்டபடிக்குள்ள 1870-ம்௵த்திய கோர்ட் கட்டண ஆக்ட், 2-வது ஷெட்யூலைச் சேர்ந்த 10-வது ஆர்ட்டிகிலின்படி, முத்திரை ஒட்டவேண்டியிருக்கிறது. யாதொரு நியாயவாதி அட்வோகேட்டாயிருந்தாலுஞ்சரி, வேறே எந்த வகையைச் சேர்ந்த நியாயவாதியாயிருந்தாலுஞ்சரி, க்ரிமினல் கேஸுகளில் வகாலத் தாக்கல் செய்யவேண்டுமென்று எந்த சட்டத்திலும் சொல்லப்படவில்லை. குற்ற விசாரணைக்குச் சம்பந்தப்பட்ட கேஸுகளில் நியாயவாதம் செய்வதைக்குறித்த விதிகளைச் சேர்ந்த 141-வது விதியில் சொல்லியிருக்கிறதாவது, குற்ற விசாரணை சம்பந்தமான நடவடிக்கைகளில் கட்சிக்காரராயிருப்பவருக்காக ஹாஜராகும் ப்ளீடர் வகாலத் தாக்கல் செய்யாவிட்டால், அப்படிப்பட்ட ப்ளீடர்கள் தாம் ஹாஜராவது சம்பந்தமாய் ஒரு யாதாஸ்து தாக்கல் செய்யவேண்டுமென்பதே. இதனால் ஏற்படும் முடிவு என்னவென்றால், அட்வோகேட்டுகள் அல்லாமல் வேறே நியாயவாதிகள் க்ரிமினல் கேஸுகளில் தாக்கல செய்யும் (கோர்ட்டில்), ஹாஜராவது சம்பந்தமான யாதாஸ்துகளுக்கு முத்திரை ஒட்டவேண்டியது அவசியமாவதில்லை ; ஆனால், அப்படிப்பட்ட யாதாஸ்துகளை அட்வோகேட்டுகள் தாக்கல் செய்தால் முத்திரை ஒட்டவேண்டியதாகிறது. இது விபரீதமானதாகும். நடவடிக்கைகள் ஒரே மாதிரியாயிருப்பதை உத்தேசித்தும் வருமானம் பாதிக்கப்படாமலிருக்கும் பொருட்டும் இந்த விபரீதத்தை விலக்கிவிடுவது அவசியமாயிருக்கிறது. ஆகவே இந்த மசோதா ஆக்ட் தயார் செய்யப்பட்டது.

1923-ம்௵ மே௴ 30௳. வி. பி. ராமஸ்வாமி ஐயர்.

ஆர். ராமசந்திர ராவ்,
கவர்ன்மெண்ட் ஸெக்ரெடரி,
லா (லெஜிஸ்லெடிவ்) டிபார்ட்மெண்ட்.

(A true translation)

N. DURAISWAMI RAO,
Acting Tamil Translator to Government.

MADRAS: PRINTED AND PUBLISHED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS.